**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம், இராமநாதபுரம்**
**(கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்)**

**முன்னிலை: திரு. C. மோகன்ராம், M.A., B.L.,**
**விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாய நீதிபதி/**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**M.C.O.P. No.68/2022**
**(CNR No.TNRM 01 000868 2022)**

1. சீதாரமணி, வயது சுமார் 52, க/பெ. லேட். ராஜேந்திரன், கிழக்குத் தெரு, வெள்ளரிஓடை கிராமம், புதுமடம் அஞ்சல், இராமநாதபுரம் வட்டம் மற்றும் மாவட்டம்.

2. பவிதா, வயது சுமார் 34, த/பெ. லேட். ராஜேந்திரன், முள்ளுவாடி கிராமம், மாயாகுளம் அஞ்சல், கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

3. கீபா, வயது சுமார் 32, க/பெ.சுரேஸ், த/பெ. லேட். ராஜேந்திரன், நடுத்தெரு, வழுதூர் கிராமம், வாலந்தரவை அஞ்சல், இராமநாதபுரம் வட்டம் மற்றும் மாவட்டம்.

4. பவானி, வயது சுமார் 27, க/பெ.மோகன்தாஸ், த/பெ. லேட். ராஜேந்திரன், கோரவள்ளி கிராமம், புதுமடம் அஞ்சல், இராமநாதபுரம் வட்டம் மற்றும் மாவட்டம்.

... மனுதாரர்கள்

/எதிர்/

1. விஜயக்குமார், த/பெ.சேகர், கதவு எண்.14/2, 8 வது தெரு, மேலப் பொன்னகரம், மதுரை வட்டம் மற்றும் மாவட்டம்.

2. சுப்புராஜ், த/பெ.கே.எஸ்.ஆனந்தராஜ், கதவு எண்.9N, No.4/13A, மேலமடை, மதுரை வட்டம் மற்றும் மாவட்டம்.

3. பொது மேலாளர், இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், நம்பர் 82, 2 வது மாடி, சந்திரகாந்தி நகர், பொன்மேனி பைபாஸ் ரோடு, பொன்மேனி, மதுரை – 625 016.

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.06 17:12:23 +0530

4. சிவபாரதி, வயது சுமார் 28, த/பெ. லேட். ராஜேந்திரன், நடுத்தெரு, வெள்ளரிஓடை கிராமம், புதுமடம் அஞ்சல், இராமநாதபுரம் வட்டம் மற்றும் மாவட்டம். தற்போது Sorgam Street, 1st Avenue, Building 6, 5th Floor, Kuwait, Citizenship No.293050605608.

... எதிர்மனுதாரர்கள்

மனு தாக்கலான நாள் – 07.03.2022

மனு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் – 13.04.2022

இம்மனு 24.02.2026 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.என்.மனோரஞ்சிதம் அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.தர்மராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.இராமநாதன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்தும், இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்...

## உத்தரவு

10.07.2021ம் தேதி காலை 11.30 மணியளவில் ஏற்பட்ட சாலை விபத்தில் இறந்துபோன ராஜேந்திரன் என்பவருக்காக மனுதாரர்கள் ரூ.25,00,000/– இழப்பீடு கோரி இம்மனு மோட்டார் வாகன விபத்து காப்பீடு சட்டம் 1988 பிரிவு 140, 141, 142 மற்றும் 166 உ/இ விதி 13(1)(8), திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டம் விதி 54/94 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:**

1) 1 முதல் 4 மனுதாரர்கள் விபத்தில் இறந்த ராஜேந்திரன் என்பவரின் மனைவி மற்றும் மகள்கள், 4ம் எதிர்மனுதாரர் இறந்த ராஜேந்திரன் மகன்.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:12:30 +0530

கடந்த 10.07.2021ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் 4ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 65 AB 2629 என்ற பதிவெண் கொண்ட Hero Passion Pro என்ற இருசக்கர வாகனத்தில் மண்டபத்தில் வேலை முடித்துவிட்டு கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி இராமேஸ்வரத்திலிருந்து மதுரை நோக்கி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அரியமான் பீச் ஸ்டாப்பிற்கு மேற்கேயுள்ள MAMS சேக் தாவூத் SISS கல்வி மற்றும் சமூக சேவை அறக்கட்டளை எதிரே ராஜேந்திரன் வந்துகொண்டிருந்தபோது அவருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த TN 72 T 4488 என்ற எண் கொண்ட Toyoto Qualish என்ற காரை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் எந்தவித முன்னெச்சரிக்கையும், சைகையும் செய்யாமல் திடிரென்று பிரேக் போட்டதால் பின்னால் சென்றுகொண்டிருந்த ராஜேந்திரன், காரின் பின்பக்க வலதுபக்க சமிக்ஞை விளக்கில் மீது மோதி நிலை தடுமாறி கீழே விழுந்ததில் வலது மற்றும் இடது முழங்காலில் சிராய்ப்புக் காயமும், தலையின் வலது பக்க காதுக்கு மேல் மண்டையில் இரத்தக்காயமும் ஏற்பட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதில் ராஜேந்திரன் 14.07.2021ம் தேதி மாலை 06.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார்.

2) விபத்து குறித்து உச்சிப்புளி காவல்நிலையத்தில் குற்ற எண்.317/2021, சட்டப்பிரிவுகள் இதச 279, 337 மற்றும் 304(A) பிரிவுகளின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2ல் நிலுவையில் இருந்து வருகிறது. விபத்து சமயம் விபத்தில் இறந்த ராஜேந்திரனுக்கு 55 வயது. அவர் மீன்பிடி தொழில் செய்து குடும்பத்தை காப்பாற்றி வந்தார். விபத்திற்கு முன்பு அவர் நல்ல ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருந்து வந்தார். விபத்தில் ராஜேந்திரன் இறந்து விட்டதால் அவரது வருமானத்தை சார்ந்திருந்த மனுதாரர்கள் மற்றும் 4ம் எதிர்மனுதாரர்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:12:35 +0530

பொருளாதார ரீதியாகவும், 1ம் மனுதாரர் தன் கணவரை இறந்ததால் கணவரின் பாசத்தையும், அன்பையும், மற்ற மனுதாரர்கள் மற்றும் 4ம் எதிர்மனுதாரர் தன் தகப்பனார் இறந்துவிட்டதால் தன் தகப்பனாரின் பாசத்தையும் அன்பையும் இழந்து விட்டார்கள்.

3) 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிச் சென்ற காரின் ஓட்டுனர் 1ம் எதிர்மனுதாரர் கவனத்துடன் வாகனத்தை ஓட்டிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது. விபத்து 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ளதால் மனுதாரர்கள் மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் பகரப்பொறுப்பு என்ற இடர்ப்பாட்டின் அடிப்படையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள். 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளதால், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் மனுதாரர்கள் கோரியுள்ள ரூ.25,00,000/– இழப்பீட்டுத் தொகையை மனு தாக்கல் செய்த தேதியில் இருந்து தொகை செலுத்தும் தேதி வரை ஆண்டுக்கு 12% வட்டியுடனும், மனுதாரர் செலவுத் தொகையுடனும் இழப்பீடு கொடுக்க இம்மனு தாக்கல்.

**3)** 1, 2 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டுள்ளார்கள். 4ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பின்னிட்டு எதிருரை தாக்கல் செய்யவில்லை.

**4) 3ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம் :**

1) மனுவில் கூறியுள்ள விவரங்களில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்டவை தவிர மற்ற அனைத்து விவரங்களையும் இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. இம்மனு தள்ளுபடிக்குரியது. மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளில் குறிப்பிட்டு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:12:47 +0530

ஒப்புக்கொள்ளதை தவிர இதர சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். மனுதாரர்கள் விபத்து நடந்தது பற்றி திரித்து பொய்யான சங்கதிகளை மனுவில் கூறியுள்ளனர். 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுனர் காரை சமிக்ஞை மற்றும் விளக்கை போட்டு ரோட்டின் இடதுபுறம் நிறுத்தியுள்ளார். TN 65 AB 2629 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த இறந்த ராஜேந்திரன் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து தகுந்த சமிக்ஞை விளக்குகளுடன் நிறுத்தப்பட்டுள்ளதை கவனிக்காமல் காரின் விளக்கு பகுதியில் மோதி விபத்து ஏற்பட்டிருந்ததால் விபத்திற்கு இறந்த நபரின் கவனக்குறைவுதான் காரணம். எனவே 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. 1ம் எதிர்மனுதாரர் விஜயக்குமார் கொடுத்த புகாரின் அடிப்படையில் இறந்த இராஜேந்திரன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன்விசாரணை மேற்கொண்ட உச்சிப்புளி போலிசார் விபத்திற்கு இறந்த நபரே காரணம் என குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

2) மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள இதர சங்கதிகளான இறந்த நபரின் வயது, தொழில், வருமானம் மற்றும் மனுதாரர்கள் இறந்த நபரை சார்ந்த நபர்கள் என்பதை மனுதாரர்களே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது. எனவே, மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கத்தல்ல. 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தாக்கல்.

**5)** 1ம் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர்கள் தரப்பில் திரு.பாலமுருகன் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ம.சா.ஆ.17 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:12:52 +0530

எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>**

1. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதைதான் காரணம் என்பது உண்மையா?
2. மனுதாரர்கள் இழப்பீடு பெற உரியவர்களா, உரியவர்களாயின் இழப்பீடு யாரால் செலுத்தப்பட வேண்டும்?
3. இழப்பீடு எவ்வளவு?

7) **<u>பிரச்சனை 1—க்குரிய தீர்வு :</u>**

மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மெய்ப்பிக்கும் விதமாக 1ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு 16 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், மனுதாரர்கள் தரப்பில் பாலமுருகன் என்ற 3ம் தரப்பினர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள 1ம் மனுதாரர் மூலம் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் குறுக்கு விசாரணையில் விபத்தை நேரிடையாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான், விபத்து எப்படி நடந்தது என்று தனக்கு தெரியாது என்றால் சரிதான் என ஒப்புக்கொண்டுள்ளதால், சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறப்படும் பாலமுருகன் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.2 பாலமுருகன் தனது சாட்சியத்தில் கடந்த 10.07.2021ம் தேதி காலை 11.30 மணியளவில் விபத்தில் இறந்துபோன ராஜேந்திரனும் TN 65 AB 2629 என்ற பதிவெண் கொண்ட Hero Passion Pro என்ற இருசக்கர வாகனத்தில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி இராமேஸ்வரத்திலிருந்து மதுரை நோக்கி வரும்போது அரியமான பீச் பேருந்து நிறுத்தத்திற்கு மேற்கே உள்ள MAMS சேக்தாவூது SISS கல்வி மற்றும் சமூக சேவை அறக்கட்டளைக்கு எதிரே வந்து கொண்டிருந்தார்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:12:59 +0530

என்றும், அவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் தான் வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது ராஜேந்திரனுக்கு முன்னால் சென்ற TN 72 T 4488 என்ற எண் கொண்ட Toyotto Qualish என்ற காரை அதன் ஓட்டுநர் எவ்வித முன்னெச்சரிக்கையும், சமிக்ஞை செய்யாமல் திடீரென பிரேக் போட்டதில் ராஜேந்திரன், காரின் வலது பக்க இண்டிகேட்டரில் மோதி நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டதில் இரத்தக்காயங்கள் ஏற்பட்டு, மயங்கி கிடந்தவரை தானும் அக்கம் பக்கம் உள்ளவர்களும் 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**8)** இவ்வழக்கில் விபத்துக்குக் காரணம் என கூறப்படும் வாகனத்தை ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாரரோ மேற்படி வாகனத்திற்கு உரிமையாளரான 2ம் எதிர்மனுதாரரோ ஆஜராகி மனுதாரர்கள் கூறுவதுபோல் விபத்து நடக்கவில்லை என எதிர்வாதம் செய்யவில்லை. அவ்வாறான சூழ்நிலையில், 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் சார்பில் விபத்துக்கு காரணம் என கூறப்படும் TN 72 T 4488 என்ற எண் கொண்ட Toyotto Qualish என்ற காரின் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான காரை 1ம் எதிர்மனுதாரரின் நண்பரான பிரகாஷ் திதி கொடுப்பதற்காக இரவலாக பெற்றுக்கொண்டு இராமேஸ்வரம் சென்று, இராமேஸ்வரத்திலிருந்து மீண்டும் மதுரை நோக்கி வரும்போது உச்சிப்புளிக்கு கிழக்கே அரியமான் பீச் அருகே விபத்து நடந்தது என்றும், விபத்திற்கு முன்பு காரில் வந்த குழந்தை சிறுநீர் கழிக்க வேண்டும் என்று கூறியதால் தான் ரோட்டின் இடதுபுறமாக காரை நிறுத்தி, அப்போது இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரம் நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்த நபர் காரின் மீது மோதி சாலையில் விழுந்துள்ளார். அவர் மீது வண்டி கிடந்தது என்றும், அவரை தூக்கி பார்த்தபோது தலையில் வலது பக்கம் இரத்தக்காயம்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:13:04 +0530

இருந்தது என்றும், பிறகு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**9)** எ.ம.சா.2 விஜயக்குமாரின் சாட்சியத்திலிருந்து மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள ம.சா.2 பாலமுருகன் சாட்சியத்தில் கூறியுள்ளதுபோல் விபத்து நடந்துள்ளது என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. மனுதாரர்கள் கூறியதுபோல் 1ம் எதிர்மனுதாரர் எவ்வித சமிக்ஞையும் செய்யாமல் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், திடீரென காரை நிறுத்தியுள்ளதால் இறந்துபோன ராஜேந்திரன் காரின் பின்புறம் மோதி விபத்து ஏற்பட்டு, விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் இறந்துள்ளாரா என இத்தீர்ப்பாயம் பரிசீலிக்கும்போது, சம்பவம் குறித்து 1ம் எதிர்மனுதாரர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துள்ளார். மனுதாரர்கள் கூறுவதுபோல் சம்பவ இடத்தில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள பாலமுருகன் பார்த்திருக்கும் பட்சத்தில் விபத்தில் இறந்துபோன ராஜேந்திரன் என்பவரை அவருக்கு ஏற்கனவே தெரியும் என்பதால் விபத்து குறித்து காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்திருக்க வாய்ப்பு உள்ளது. ஆனால், அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்பதும் விபத்து சம்பந்தமாக இறந்த ராஜேந்திரன் மீதுதான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் தனக்கு தெரியாது என்றும் கூறியுள்ளதிலிருந்து அவர் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்பது தெளிவாகிறது.

**10)** 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகி வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் ***Oriental Insurance Company Limited Vs Tata AIG General Insurance Company Limited and others, Civil Appeal No......of 2026 INSC 208 Civil of 2026 arising out of Special Leave Petition (C) No.14988 of 2023*** என்ற வழக்கை மேற்கோள் காட்டி வாதிட்டார். மேற்படி வழக்கில் உள்ள பொருண்மைகளை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:13:10 +0530

இவ்வழக்கின் பொருண்மைக்கு பொருந்திப் பார்க்கையில் விபத்து நடந்ததாக சொல்லப்பட்டுள்ள இடம் தேசிய நெடுஞ்சாலை, விபத்து நடந்த இடத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை நிறுத்தவேண்டிய அவசியம் இல்லை. வேகமாக சென்று கொண்டிருந்த வாகனம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இறந்த ராஜேந்திரன் மோத நேரிட்டுள்ளது என்பதையும், அவரால் இருசக்கர வாகனத்தின் வேகத்தை குறைத்து விபத்தை தவிர்த்திருக்க வாய்ப்பு இல்லை என்பதையும் இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

**11)** 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகி வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இறந்த நபர் முன்னால் சென்ற வாகனத்தின் பின்னால் வந்து மோதியதால் விபத்திற்கு அவரது கவனக்குறைவும் காரணம் என்பதால் அவரது கவனக்குறைவிற்கு 50 சதவீதம் விழுக்காடு காரணம் என முடிவு செய்ய வேண்டும் என வாதிட்டார். மேலும், ***K.Sekar and Kalaiselvi Vs S.R.S Travels 2021(1) TN MAC 407*** என்ற வழக்கில்

***"Accident involving two vehicles – Deceased riding Motorcycle rammed into left side of stationed Bus – FIR registered against deceased closed as abated"***

நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை மேற்கோள்காட்டி 3ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார். மேற்படி வழக்கில் கண்ட பொருண்மையை இத்தீர்ப்பாயம் பரிசீலிக்கும்போது நின்றுகொண்டிருந்த பேருந்தின் இடதுபுறம் அந்த வழக்கில் இறந்துபோன நபர் மோட்டார் சைக்கிளை மோதியதாக உள்ளது. ஆனால் இந்த வழக்கில் நின்று கொண்டிருந்த காரின் மீது இறந்துபோன ராஜேந்திரன் மோதவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் சாட்சியத்திலிருந்து காரில் வந்த குழந்தை சிறுநீர் கழிக்க

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:13:15 +0530

வேண்டும் என்று கூறியதால் இடதுபுறமாக நிறுத்தினேன் என கூறியதிலிருந்து காரை திடீரென நிறுத்தியதால் பின்னால் வந்த இறந்துபோன ராஜேந்திரன் மோத நேரிட்டுள்ளது என்பதை இத்தீர்ப்பாயம் உறுதிப்படுத்த முடிவதால், விபத்திற்கு விபத்தில் இறந்த ராஜேந்திரனின் கவனக்குறைவு காரணம் அல்ல என்றும் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் திடீரென 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை நிறுத்தியதால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை–1க்குரிய தீர்வு காண்கிறது.

**12) <u>பிரச்சனை 2–க்குரிய தீர்வு :</u>**

பிரச்சனை 1க்குரிய தீர்வில் விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவே காரணம் என தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே, 1ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு காரணமானவர் என்ற முறையிலும், விபத்திற்கு காரணமான வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் உரிமையாளர் என்ற முறையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள். 2ம் எதிர்னுமனுதாரரின் கார் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும்விதமாக 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீடு நகல் ம.சா.ஆ.12, 1ம் மனுதாரர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்கையில் ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள காப்பீட்டின் படி 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 72 T 4488 Toyotto Qualish என்ற கார் காப்பீடு செய்யப்பட்டது என மறுக்கவில்லை. இவ்வழக்கில் விபத்தில் இறந்த நபர் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து 3ம் தரப்பினர் என்பதால், 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் காப்பீட்டின்படி, 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டிய இழப்பீடு தொகையை செலுத்த கடமைப்பட்டவர். எனவே, 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு தனித்தனியாகவும், கூட்டாகவும்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:13:23 +0530

இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை–2 க்குரிய தீர்வு காண்கிறது.

13) **பிரச்சனை 3–க்குரிய தீர்வு :**

மனுதாரர்கள் தங்களது மனுவில் இறந்த ராஜேந்திரன் விபத்து சமயம் 55 வயது உள்ளவர் என்றும், மீன்பிடி தொழில் செய்து வந்தார் என்றும், மாதம் ரூ.36,000/– சம்பாதித்து வந்தார் என்றும் தெரிவித்துள்ளார்கள். அதனை நிரூபிக்கும் விதமாக மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என இத்தீர்ப்பாயம் பரிசீலிக்கும்போது இராமநாதபுரம், மீன்வளத்துறை உதவி இயக்குநர் வழங்கிய அடையாள அட்டை ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுளளது. மேலும் மண்டபம் தேசிய மீன் விசை சமூகத்தில் செயலாளர் ராஜேந்திரன் விசை பிடியாள் ஆளாக ஈடுபட்டு வந்தார் என சான்று வழங்கியுள்ளார். மனுதாரர்கள் தரப்பில் இறந்த ராஜேந்திரன் மொத்தம் ரூ.36,000/– மீன்பிடி தொழில் மூலம் சம்பாதித்து வந்தார் என்பதை நிரூப்பிப்பதற்கு எந்தவொரு ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள் தங்கள் மனுவில் இறந்த இராஜேந்திரனின் வயது விபத்து சமயத்தில் 55 என்பதை மெய்ப்பிக்கும் விதமாக பிரேத பரிசோதனை அறிக்கையை தாக்கல் செய்துள்ளனர். மேலும், இறந்த ராஜேந்திரனின் வயது 55 வயதிற்கும் கூடுதலான வயது என்பதை நிரூபிக்கும் விதமாக 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணங்களும் இல்லை என்பதாலும், அதுகுறித்து குறுக்குவிசாரணையின் மூலம் மனுதாரர்கள் இறந்த ராஜேந்திரனின் வயதை குறைத்து கூறியுள்ளார்கள் என்பதை மெய்ப்பிக்கும் விதமாக 1ம் மனுதாரரிடமிருந்து எவ்வித பதில்களை பெறவில்லை என்பதால் விபத்து சமயத்தில் இறந்த ராஜேந்திரனின் வயது 55 என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:13:29 +0530

**14)** முன்பே கூறியுள்ளதுபோல், இறந்த ராஜேந்திரன் என்பவரின் மாத வருமானம் ரூ.36,000/- என்பதை நிரூபிக்க தகுந்த செல்லத்தக்கதக்க ஆவணங்களை மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை என்பதால் இறந்த நபரின் வயது மற்றும் அவரது தொழில் அவரைச் சார்ந்து வாழ்ந்துள்ள நபர்களின் எண்ணிக்கையைக் கொண்டு பரிசீலிக்கும்போது, இறந்த நபர் மாதம் சரசாரியாக ரூ.18,000/- சம்பாதித்திருக்க வாய்ப்பு உள்ளது. எனவே, இறந்த ராஜேந்திரனின் மாத வருமானம் தோராயமாக ரூ.18,000/- என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

**15)** இறந்துபோன ராஜேந்திரனின் வயது 55 என்பதையும் அவரது மாத வருமானம் ரூ.18,000/- என நிர்ணயித்துள்ளதை கருத்தில் கொண்டும், **நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி எதிர் பிரணாய் சேத்தி (2017 (2) TNMAC 609) (SC)** என்ற வழக்கில் வழங்கப்பட்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் ராஜேந்திரனின் எதிர்கால ஊதியத்தை நிர்ணயம் செய்ய 10% கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் ரூ.18,000 + 1,800 = ரூ.19,800/-ஐ ராஜேந்திரனின் மாத வருமானமாக இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது. **சரளா வர்மா எதிர் டெல்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேசன் (2009 (2) TNMAC 1) (SCC)** என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில் ராஜேந்திரன் இறக்கும்போது 55 வயதுடையவர் என்பதாலும் அவரது வருமானத்தை சார்ந்து ஐந்து நபர்கள் உள்ளார்கள் என்பதாலும் அவருடைய வருமானத்தில் அவரது சொந்த செலவிற்காக 1/4 பாகம் எடுத்தது போக மீதி 3/4 பாகத்தை தன்னுடைய குடும்பத்திற்கு கொடுத்திருப்பார் என்று கருதி அதன் அடிப்படையில் ரூ.19,800 - ரூ.4,950 = ரூ.14,850/-ஐ இறந்த ராஜேந்திரன் தனது குடும்பத்திற்கு கொடுத்திருப்பார் என்று தீர்மானிக்கப்படுகிறது. சரளா வர்மா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இறந்த ராஜேந்திரனின் வயது 55 என்பதை கருத்தில் கொண்டு 11 பெருக்கல் குறியீட்டை இந்த தீர்ப்பாயம் கணக்கில் கொண்டு, வருமான நஷ்ட ஈட்டை நிர்ணயம் செய்கிறது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:13:38 +0530

அந்த அடிப்படையில் ரூ.14,850 x 12 x 11 = ரூ.19,60,200/- வருமான இழப்பீடாக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

**16)** பிரணாய் சேத்தி வழக்கில், சொத்து இழப்பு, அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றுக்கான இழப்பு மற்றும் இறுதிச்சடங்கு செலவுகள் போன்ற வழக்கமான தலைப்புகளை ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் 10% வீதத்தில் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இவ்வழக்கு விபத்து 2021 ஆம் ஆண்டு நடந்துள்ளது. எனவே, சொத்து இழப்பு, அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றுக்கான இழப்பு மற்றும் இறுதிச்சடங்கு செலவுகள் என்ற தலைப்பின் கீழ் அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றுக்கான இழப்புக்கு ரூ.44,000/- ஆகவும், இறுதிச்சடங்கு செலவுகள் மற்றும் உடைமை இழப்புக்கு தலா ரூ.16,500/- ஆகவும் இழப்பீடு மதிப்பிடப்பட்டுள்ளது.

**17)** மேற்படி இழப்பீட்டுத்தொகை மனுதாரர்களுக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் கீழ்க்கண்டவாறு இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

| | |
|---|---|
| வருமான இழப்பு | ரூ. 19,60,200 |
| 1 முதல் 4 மனுதாரர்கள் மற்றும் 4ம் எதிர்மனுதாரருக்கு அன்பு மற்றும் பாசம் இழப்பு | ரூ. 44,000 |
| ஈமக்கிரியை செலவு | ரூ. 16,500 |
| உடைமைகள் இழப்பு | ரூ. 16,500 |
| மொத்தம் | **ரூ. 20,37,200/-** |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:13:43 +0530

மேற்படி இழப்பீட்டுத்தொகை மனுதாரர்கள் மற்றும் 4ம் எதிர்மனுதாரருக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் கீழ்க்கண்டவாறு இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**இறுதியாக,**

**1.** இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**2.** 1 முதல் 4 மனுதாரர்கள் மற்றும் 4ம் எதிர்மனுதாரருக்கு 3ம் எதிர்மனுதாரர் ஒட்டுமொத்த இழப்பீடாக **ரூ.20,37,200/-**ம், அதற்கு மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை வருடத்திற்கு 7.5% வட்டியுடன் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மெய்நிகர் கணக்கு (Virtual Account) எண்.ADJRMD682022 **(IFSC.No. SBIN0004266)**-ல் வைப்பீடு செய்ய வேண்டும் என உத்தரவிடுகிறது. (Excluding default period if any)

**3.** மேற்படி இழப்பீட்டுத்தொகையில் 1ம் மனுதாரருக்கு **ரூ.12,22,320/-**ம், 2 முதல் 4 மனுதாரர்கள் மற்றும் 4ம் எதிர்மனுதாரருக்கு தலா **ரூ.2,03,720/-**ம் கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்து உத்தரவிடுகிறது.

**4.** 3ம் எதிர்மனுதாரர் மேற்படி இழப்பீட்டுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த பின்னர் மனுதாரர்கள் மற்றும் 4ம் எதிர்மனுதாரர் அவர்களது பங்குத்தொகையுடன் வட்டி மற்றும் செலவுத்தொகை ஆகியவற்றை உடனடியாக பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடுகிறது.

**5.** மனுதாரர்கள் செலுத்திய நீதிமன்ற கட்டணம் போக இழப்பீடு தொகைக்குரிய மீதமுள்ள நீதிமன்றக் கட்டணத்தை இவ்வுத்தரவு தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றக் கட்டணம் முழுவதையும் செலுத்தும் தேதிவரை இழப்பீட்டு தொகைக்கு மனுதாரர்கள் வட்டி பெறத்தக்கவர்கள் அல்ல என்றும் உத்தரவிடுகிறது.

**6.** வழக்குரைஞர் ஊதியம் **ரூ. 39,872/-** என்று நிர்ணயம் செய்கிறது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:13:50 +0530

**மனுதாரர்கள் தரப்பு செலவுத்தொகைப்பட்டியல்**

| | | |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. 19744 50 | |
| வக்காலத்து செலவு | ரூ. 10 00 | |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. 39872 00 | |
| மொத்தம் | **ரூ. 59626 50** | முழுமையாக **ரூ.59,627/-** |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பின்னர் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ஆம் நாள் என்னால் திறந்த இத்தீர்ப்பாயத்தில் அவையறிய பகரப்பட்டது.

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.06 17:13:57 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு**
**கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :**

ம.சா.1 – திருமதி. சீதாரமணி
ம.சா.2 – திரு. பாலமுருகன்

**மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள் :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.2 | இராமநாதபுரம் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு | நகல் |
| ம.சா.ஆ.3 | மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு | நகல் |
| ம.சா.ஆ.4 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.5 | இறந்த ராஜேந்திரனின் மீனவர் அடையாள அட்டை | நகல் |
| ம.சா.ஆ.6 | IND TN MM 719 என்ற மீன் பிடி விசைப்படகில் பிடி ஆளாக வேலை செய்ததற்குரிய சான்று | நகல் |

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.06 17:14:03 +0530

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.7 | IND TN MM 719 என்ற மீன்பிடி விசைப்படகின் உரிமம் சான்று | நகல் |
| ம.சா.ஆ.8 | இறந்த நபரின் ஆதார் அடையாள அட்டை | நகல் |
| ம.சா.ஆ.9 | வாரிசு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.10 | இறப்புச் சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.11 | 2 ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பதிவுச் சான்று | நகல் |
| ம.சா.ஆ.12 | 2 ம் எதிர்மனுதாரரர் வாகனத்தின் காப்பீடு பாலிசி | நகல் |
| ம.சா.ஆ.13 | 4 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்று | நகல் |
| ம.சா.ஆ.14 | 4 ம் எதிர்மனுதாரரின் கடவுச்சீட்டு | நகல் |
| ம.சா.ஆ.15 | அ.சா.1 ன் ஆதார் அடையாள அட்டை | நகல் |
| ம.சா.ஆ.16 | பிரேத பரிசோதனை அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.17 | அ.சா.2 ன் ஆதார் அடையாள அட்டை | நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :**

எ.ம.சா.1 – திரு. பத்ரோஸ்
எ.ம.சா.2– திரு. விஜயகுமார்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்:**

எ.ம.சா.ஆ.1– இறுதி அறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் – உண்மை நகல்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:14:10 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு**
**கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,**
**இராமநாதபுரம்.**